வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந,க.எண்.3865 /ஆ4/2023 நாள்: 22.02.2024

பொருள்: தேர்வுகள்– வேலூர் மாவட்டம் – மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச்–2024 –பொதுத்தேர்வு –அறைக் கண்காணிப்பாளர் தேர்வு –குலுக்கல் முறையில் (lot System ) –தேர்வு மையங்களாக செயல்படும் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் –வருகை புரிய தெரிவித்தல் –சார்பு

=========

மேற்காணும் பொருள் சார்பாக அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் அறிவுரைகளின் படி நடைபெறவுள்ள மார்ச் –202 மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்விற்கு அறைக் கண்காணிப்பாளர் தேர்வு குலுக்கல் முறையில் (LOT SYSTEM) தேர்வு செய்யப்பட உள்ளதால் மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு செயல்படும் பள்ளியின் தலைமையாசிரியர்கள்(இணைப்பு பள்ளி தலைமை ஆசிரியர்கள் தவிர்த்து) வருகை புரிந்து தங்கள் தேர்வு மையங்களுக்கு தேவையான அறை கண்காணிப்பாளர்களை தேர்ந்தெடுக்க கீழ்கண்ட அட்டவணைப்படி தேர்வு மைய தலைமையாசிரியர் வருகைப் புரிய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இடம் :ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,சத்துவாச்சாரி,வேலூர்.**

**நாள் : 23.02.2024 பி.ப**

| வ. எண் | நேரம் | ஒன்றியம் |
|---|---|---|
| 1. | 2 மணிக்கு | குடியாத்தம்,பேர்ணாம்பட்டு |
| 2. | 3 மணிக்கு | அணைக்கட்டு ,கணியம்பாடி |
| 3. | 4 மணிக்கு | காட்பாடி, கே.வி.குப்பம் |
| 4 | 5 மணிக்கு | வேலூர் நகர்/ புறநகர் |

**கூட்டத்தில் கலந்துக் கொள்ளும் தலைமைஆசிரியர்கள் கட்டாயம் கீழ்க்கண்டவற்றை உடன் கொண்டு வருதல் வேண்டும்**

- தேர்வு மையமாக செயல்படும் பள்ளிகளின் தங்கள் பள்ளியில் தேர்வு எழுதும் மாணவர்களின் ஆண் / பெண் வகுப்பு வாரியாக (11 ஆம் வகுப்பு / 12 ஆம் வகுப்பு ) விவரம் ( Students Strength)
- தங்கள் பள்ளியில் தேர்வு எழுதும் மாணவர்களில் மாற்று திறனாளி மாணவர்களின் விவரம் ஆண்/ பெண் வாரியாக
- தங்கள் பள்யியில் இணைப்பு பள்ளியாக தேர்வு எழுதவுள்ள மாணவர்களின் விவரம் ( மேற்குறிப்பிட்டுள்ளவாறு )
- இணைப்பு பள்ளியில் உள்ள மாணவர்களில் மாற்றுத் திறனாளி மாணவர்கள் இருப்பின் தேர்வெழுதும் மாணாக்கர்களின் விவரங்களை தங்கள் பள்ளியின் இணைப்பு பள்ளி தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெற்று கூட்டத்தில் உடன் கொண்டு வருதல் வேண்டும்.

// ஒம்.செ.மணிமொழி //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
தேர்வுமையமாக செயல்படும் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்/ மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் ,வேலூர் மாவட்டம்.
நகல் :
வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் ) தகவலுக்காகவும்,தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பாலகிறது.